# காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பு

## தக்காளி

மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகம், தெலுங்கான, ஒடிசா மற்றம் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தக்காளி அதிகளவு பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகியவை தக்காளி அதிகம் பயிரிடும் மாவட்டங்களாகும். வர்த்தக மூலங்களின் படி உள்ளூர் வரத்து நீங்கலாக அண்டை மாநிலங்களான ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகாவின் பங்களிப்பு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்கின்றன. தற்போது கோயம்பத்தூர் மொத்த விலை சந்தைக்கு தக்காளியின் வரத்தானது அதன் சுற்று வட்டார பகுதிகளான செம்மேடு, கிணத்துகடவு, ஆலந்துறை, நாச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து வருகிறது. கடந்த வடகிழக்கு பருவகாலத்தில் கோயம்புத்தூர் பகுதிகளில் தேவையான அளவு மழை பெற்றுள்ளதால் தக்காளி சாகுபடி பரப்பு அதிகரித்து உள்ளது. கர்நாடகாவிலும் தக்காளி சாகுபடிக்கு சாதகமான மழை பெய்துள்ளது.

## கத்தரிக்காய்

கத்தரிக்காய் குளிர் மற்றும் கோடை காலங்களில் அதிகளவு பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் கத்தரிக்காய் அதிகமாக பயிரிடப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி, கத்தரி வரத்தானது நாச்சிபாளையம், ஆலந்துறை, தேனி, ஒசூர் மற்றம் கம்பம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது. தற்போது கோயம்புத்தூர் சந்தைக்கு தமிழ்நாடு மற்றம் கர்நாடகாவில் (மைசூர்) இருந்து போதுமான வரத்து வருவதாக அறியப்படுகிறது.

## வெண்டை

தமிழ்நாட்டில் வெண்டைக்காய் பிப்ரவரி (தைப்பட்டம்) மற்றும் ஜுன் முதல் ஆகஸ்ட் (ஆடிப்பட்டம்) ஆகிய பருவங்களில் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் தலைவாசல், மகுடஞ்சாவடி வட்டாரங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காரமடை, பெரியநாயக்கன் பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர் வட்டாரங்கள், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி வட்டாரம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் மையம்பட்டி வட்டாரம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகிறது. பொதுவாக ஜனவரி முதல் பிப்ரவரி வரையான காலங்களில் வெண்டையின் விலை ஏறுமுகமாகவே காணப்படும். வர்த்தக மூலங்களின் படி வெண்டையின் பெரும்பாலான வரத்தானது ஒசூர், பொள்ளாச்சி மற்றும் உடுமைலைபேட்டை ஆகிய பகுதிகளிலிருந்து கோயம்புத்தூர் சந்தைக்கு வருகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், ஒட்டன்சத்திரம் சந்தையில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை விலை மற்றும சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அறுவடையின்போது தரமான தக்காளியின் பண்ணை விலை ரூ. 18 முதல் ரூ. 20, வரை, நல்ல தரமான கத்திரி கிலோவுக்கு ரூ. 28, முதல் ரூ. 30, ஆகவும் மற்றும் தரமான வெண்டையின் பண்ணை விலை ரூ. 23 முதல் ரூ. 25, வரை இருக்கும் என்று அறியப்படுகிறது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374